[*1996 பிப்ரவரி 23*

வினா எண் 102, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு நிதி அமைச்சர்.

102--

கிளைக் கருவூலத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

***87348--டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடி நகரில், பரமக்குடி தாலுகாவில் கிளைக் கருவூலத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசிடம் இது குறித்து திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) எழவில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி தாலுக்காவில் கிளைக் கருவூலம் கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அங்கே நிரந்தரமாகக் கட்டிடம் கட்டவேண்டும் என்பதற்காக அந்த மாவட்டத்தில் உள்ள கருவூலத்தினுடைய அதிகாரிகள் பார்வையிட்டு, 4 வருடங்களாக இடத்தை ஆர்ஜிதம் செய்வதற்காக பல கோப்புகளை வருவாய்த்துறைக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். 43 சென்ட் நிலம் அந்தத் தாலுக்கா அலுவலகத்திலே கிழக்கு மேற்காக இடம் வேண்டும். தெற்கு வடக்காக இருந்தால், அங்கே கோயில் வருகிறது என்ற காரணத்தைக் காட்டி, கிழக்கு மேற்காக, காந்திஜி ரோட்டையொட்டி இருக்கின்ற இடம் வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், வருவாய்த் துறைக்கும் கோப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. கருவூலக் கட்டிடம் கட்டுவதற்காக அந்தக் கருவூலத்துறையினுடைய அதிகாரிகள் பல காலங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார்கள். ஆகவே, வருவாய்த் துறையினுடைய இடத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பெற்று, அங்கே கிளைக் கருவூலம் கட்டுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

1996 பிப்ரவரி 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி சார்நிலைக் கருவூலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இப்போது செயல்பட்டு வருகிறது. மேற்படி சார்நிலைக் கருவூலத்திற்கான கட்டிடம் கட்ட, தேவையான காலி நிலத்தைப் பெறும் செயற்குறிப்பு இப்போது அரசிடம் இல்லை. அதற்கான நிலத்தைப் பெறுவதற்கு பரமக்குடி வட்டாட்சியரைத் தொடர்பு கொண்டு, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, கருவூலக் கணக்குத் துறையில் நடவடிக்கையில் உள்ளது. பரமக்குடி சார்நிலைக் கருவூலத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு பரமக்குடி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் நிலம் ஒதுக்கீடு செய்யும் பணி மாவட்ட ஆட்சித் தலைவர், ராமநாதபுரம் அவர்களின் பரிசீலனையில் உள்ளது. நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன், கட்டிடம் கட்டுவதற்கான கருத்துரு கருவூலக் கணக்குத் துறை இயக்குநரால், அரசுக்கு அனுப்பப்பட்டு, பிறகு, அரசு அதுகுறித்து பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிளைக் கருவூலத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்காக ஒரு காலக்கெடுவை நிர்ணயித்து, அந்தக் காலத்திற்குள் கட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே காலக்கெடு எதையும் நிர்ணயிக்க இயலாது. அங்கே நடைபெற வேண்டிய அடிப்படைக்காரியங்கள் எல்லாம் நடைபெற்று, வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலேயே காலி இடம் இருக்கிறது, அதை ஒதுக்கித் தர முடியும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் பரிந்துரை செய்தால், கணக்குத் துறை அதுபற்றி முடிவு எடுத்து, அதை அரசுக்கு அனுப்பும். அரசு அதுபற்றி தக்க முடிவு எடுக்கும் என்று நான் சொல்லியிருக்கிறேன். எவ்வளவு காலத்திற்குள் நடைபெறும், எப்படி நடைபெறும் என்பது எல்லாம் எடுக்கப்படுகிற நடவடிக்கைகளின் விரைவைப் பொறுத்து அமையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, வினாக்கள் 105 மற்றும் 106 முன்னதாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

வினா எண் 105, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.